3. விதி 110-ன்கீழ் அறிக்கை

சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதி, ஒருங்கிணைந்த நவீன கால்நடை பூங்கா நிறுவுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-55

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சி தொடர விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தையும், கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை ஏற்றமடையச் செய்ய, விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பாகச் செயல்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசு, இத்திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருவதுடன் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும்வண்ணம், "அசீல்" இனக் கோழிகளை கிராமப்புற மக்களுக்கு வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில், வேளாண் தொழிலின் உபதொழிலான கால்நடைத் தொழிலை மேன்மைப்படுத்தி விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் ஈட்டித்தரும் வகையில், கால்நடை பராமரிப்புத் துறையின் உட்கட்டமைப்புகளையும், தொழில்நுட்பங்களையும் மேம்படுத்த போதுமான நிதி ஆதாரங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு அளித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக, சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டு ரோட்டிற்கு அருகில் தேசிய நெடுஞ்சாலை எண் 79-ஐ ஒட்டி அமைந்துள்ள கால்நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான 900 ஏக்கர் பரப்பில் கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வள நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய உலகத்தரம் வாய்ந்த ஆசியாவிலேயே பெரிய ஒருங்கிணைந்த பல்துறை பல்நோக்குடன்கூடிய நவீன கால்நடை பூங்கா ஒன்று சுமார் 396 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மூன்று பிரிவுகளாக அமைய உள்ள இப்பூங்காவின் முதலாவது பிரிவில், நவீன வசதிகளைக்கொண்ட கால்நடை மருத்துவமனை, நவீன பண்ணை முறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக்காட்டும் வகையில் கறவை மாட்டுப் பண்ணை, உள்நாட்டு மாட்டினங்களான காங்கேயம், உம்பளாச்சேரி, ஆலம்பாடி, புலிக்குளம் மற்றும் பர்கூர் ஆகியவற்றின் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்கப் பண்ணை, செம்மறி மற்றும் வெள்ளாட்டின் பண்ணை, பன்றிகள், கோழியினப் பிரிவுகள் மற்றும் நாட்டின நாய் இனங்களான இராஜபாளையம், சிப்பிப்பாறை, கோம்பை, கன்னி ஆகியவற்றிற்கான இனப்பெருக்கப் பிரிவுகளைக்கொண்ட கால்நடைப் பண்ணை வளாகம் அமைக்கவும், இரண்டாம் பிரிவில் பால், இறைச்சி, மீன் மற்றும் முட்டை போன்ற உணவுப்பொருட்களைப் பாதுகாத்து பதப்படுத்தவும், அவற்றிலிருந்து பல்வேறு மதிப்புக்கூட்டிய உபப்பொருட்களைத் தயார் செய்யவும், அவற்றை சந்தைப்படுத்த வசதி ஏற்படுத்தவும், மூன்றாவது பிரிவில் பயிற்சி, விரிவாக்கம், கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில்முனைவோருக்கான பயிலரங்கத்துடன் பல்வேறு அம்சங்களைக் கொண்ட வளாகம் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும், இந்த நவீன பூங்கா தமிழகத்தில் கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற அனைத்து மாணவர்களும் பயிற்சி மேற்கொள்ளவும், உலக நாடுகளில் உள்ள கால்நடை மருத்துவம் படிக்கின்ற மாணவர்களும் அங்கே வந்து ஆராய்ச்சி மேற்கொள்ளவும் நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். உலகத்தரம் வாய்ந்த இவ்வளாகம் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் நுகர்வோர் பயன்பெறும் வகையில், அனைத்து அடிப்படை வசதிகளையும்கொண்ட வளாகமாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். “மரபுத் திறன்மிக்க நாட்டின மற்றும் கலப்பின காளைகளைக்கொண்டு 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புதிய உறைவிந்து உற்பத்தி நிலையம் அமைக்கப்படும்” என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தனது 2019-2020 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்த உறைவிந்து உற்பத்தி நிலையம் இந்த வளாகத்திலேயே அமையப்பெறும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மிகப்பெரிய அளவில் இப்பூங்கா அமைக்கப்படுவதால், இதனை நிருவகிப்பதற்கு தொடர்புடைய துறை இயக்குநர்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிருவாக இயக்குநர், தமிழ்நாடு கால்நடை

மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் மாண்புமிகு அம்மாவின் பெயரால் அமைந்துள்ள மீன் வள பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஆகியோரை செயற்குழு மற்றும் பொதுக் குழு உறுப்பினர்களாகக்கொண்டு, ஒரு சங்கம் அமைக்கப்பட்டு பதிவு செய்யப்படும். இத்திட்டத்தை ஒருங்கிணைத்து சிறப்பாகச் செயல்படுத்திட கால்நடை பராமரிப்பு கூடுதல் இயக்குநர் பதவி உருவாக்கப்படும். மேலும், சம்பந்தப்பட்ட துறையிலிருந்து பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, தினசரி நிருவாகப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. விதி 110–ன்கீழ் முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

நண்பகல் 12-00

***மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவில் தமிழகத்தை முதல் மாநிலமாக மாற்றுவேன் என்று சபதமிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணங்களை இன்று செயல்வடிவாக்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த இத்திட்டங்களினால், தமிழகம் வளம் பெறும், தமிழக மக்கள் நலம் பெறுவார்கள். கால்நடை பராமரிப்புத் துறையானது கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்திற்கு பக்கபலமாக உள்ளது. கால்நடைகள் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு முக்கிய வருமானம் ஈட்டும் முகமைகளாக விளங்குகின்றன. இத்துறையில், தமிழக அரசு எடுத்து வரும் சீரிய முயற்சியின் தொடர்ச்சியாக, கடந்த ஆண்டு 1,74,161 முட்டைகள் உற்பத்தியுடன், இந்திய அளவில் முதல் இடத்திலும், 6 கோடியே 34 ஆயிரம் கிலோ இறைச்சி உற்பத்தியுடன், இந்திய அளவில் 5-வது இடத்திலும், அதிக பால் உற்பத்தித் திறனுடைய கலப்பினக் கறவைகள் உள்ள மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குவதுடன், வருடத்திற்கு சுமார் 77 இலட்சத்து, 14 ஆயிரம் மெட்ரிக் டன் பால் உற்பத்தி செய்து, இந்திய அளவில் 9-வது இடத்திலும் உள்ளது என்பதை முதலில் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.